# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2018ம் ஆண்டு ஜுன் மாதம் 27 ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

---

**பொருள் – 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் மே – 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் மே – 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 3**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் – தினசரி காய்கறி நாளங்காடியின் 2015–16ம் ஆண்டின் குத்தகைதாரர் திருமதி வி. என். கவிதா என்பவர் இந் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் இதற்கு முன்பு மேற்படி குத்தகைதாரருக்கு எதிராக காய்கறி வியாபாரிகள் தொடரப்பட்ட வழக்கிற்கும் இந் நகராட்சி சார்பாக வழக்காடும் திரு பி. சீனிவாஸ், அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்காடு கட்டணமாக ரூ.50,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலக குறிப்பு–

வழக்கு எண். 2250/2018 உயர்நீதி மன்றம் சென்னை காய்கறி வியாபாரிகள் தொடர்ந்த வழக்கிற்காக இந் நகராட்சி சார்பாக வழக்காடுவதால் அரசு வழக்கறிஞர் திரு பி. சீனிவாஸ் அவர்களுக்கு வழக்காடு தொகை வழங்க அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 4**

இந் நகராட்சியின் கணினி பிரிவு மற்றும் இதர பிரிவுகளில் தினசரி பணிகளுக்கு ஈ–மெயில் எடுப்பதற்கும், தட்டச்சு செய்வதற்கும், சம்பள ரசீதுகள் எடுப்பதற்கும் பேப்பர்கள் மற்றும் டோனர்கள் தேவைப்படுவதால் அவற்றினை டி.யு.சி.எஸ். நிறுவனம், சென்னையில் வாங்கிடவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.72540/– க்கு கீழ்கண்டவாறு பொருட்களை வாங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | தேவைப்படும் பொருட்கள் | ஒரு எண்ணிக்கையின் விலை | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்த விலை |
|---|---|---|---|---|
| 1 | ஏ–4 பேப்பர் | ரூ.224/– | 50 | ரூ.11,200/– |
| 2 | FS பேப்பர் | ரூ.292/– | 20 | ரூ.5,840/– |
| 3 | 12–ஏ, டோனர் | ரூ.5,550/– | 10 | ரூ.55,500/– |
| | | மொத்தம் | | ரூ.72,540/– |

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம். (ந.க.எண்.2799/2005/பி2)

**பொருள் – 5**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி உரகிடங்கில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.282.00 இலட்சத்திற்கு 24.5.2017 அன்று திருத்திய நிர்வாக அனுமதி ந.க.எண். 11088–1/2017/பி3 நாள் 24.5.2017ம் தேதிய நிர்வாக அனுமதி 282.00 இலட்சத்திற்கு கிடைக்கப்பட்டதை தொடர்ந்து அதற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. III-Package ரூ.186.95 இலட்சத்திற்கும் IV-Package ரூ53.94 இலட்சத்திற்கும் பணிகள் செய்ய நகராட்சி உரகிடங்கு பகுதியான தூக்குமரக்குட்டை பகுதியில் பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே தற்போது நகராட்சி உரகிடங்கில் நுண்ணிய பசுமை உரகுடில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. குப்பைகள் உருவாகும் இடத்திலேயே அதனை உரமாக்கம் பணிக்காக நுண்ணிய பசுமை உரகுடில் அமைக்கவும் நகராட்சியின் அண்ணா நகர் மற்றும் அழகேசன் நகர் பகுதியில் Onsite Composting 1 MT அளவிற்கு அமைக்கவும் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அன்னாரின் வழிகாட்டுதலுக்கு இணங்க 23.4.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தின் படியும் மேற்கண்ட S.W.M. பணிகளான 3 பசுமை உரக்குடில்கள் அமைக்கவும் மற்றும் அதற்கான இயந்திரங்கள் இதர உள்கட்டமைப்புகள் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது.

**Chengalpattu Municipality – SBM - SWM – revised**

| | | |
|---|---|---|
| 1 | Construction of Compost plat form, Construction of 1/3 work for over the compost pad, Construction of preprocess shed providing teach ate Management system. Rs. 186.95 lakhs | Construction of processing shed for centralized micro composting plant ( 70 X 20) providing Cement Road 300m storm water drain 150ml and providing teachate Management system and water supply Arrangement ( 10000 OHT and 10000 sump) Rs.186.94 lakhs |
| 2 | Construction of Administrative building, Construction of Labour rest room, providing water Supply Arrangement. Providing Electrical Arrangement, construction of Manure Godown, construction of compound wall, providing CC Road, construction of storm water drain providing green belt. Rs.53.94 lakhs . | Construction of Labour rest room (10 x 5) providing Electrical arrangement, Construction of Compound wall (145 construction of manure godown (4 x 4) providing green belt. Onsite composting at Anna Nagar and Alagesan Nager.<br>Rs.53.94 lakhs. |

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருத்திய மதிப்பீட்டின்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. மேலும் திட்ட பணிகளின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நகர மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கிய ஒப்பந்ததாரா் திரு இ. சந்திரன் III-Package திரு கே. வெங்கடேசலு IV-Package அவா்கள் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடின்படி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்,

**பொருள் – 6**

செங்கல்பட்டு நகராட்சி பொறியியல் பிரிவில் பல்வேறு பொது பணிகள் பொது ஏல முறையில் செயல்படுத்துவதற்கு பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான பில் பட்டியல்கள் வந்து உள்ளதால் அதற்கான தோராய விளம்பர செலவினம் ரூ.**7.00** லட்சம் தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியத்தினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பின்னேற்ப்பு வழங்கலாம். (ந.க.எண்.3121/2016/இ1)

**பொருள் – 7**

இந் நகராட்சி வரி இனங்கள் நடப்பு மற்றும் நிலுவை கேட்பு Data Entry செய்து தணிக்கைக்கு உட்படுத்த வேண்டியிருப்பதால். மேற்படி பணியினை Data Entry செய்து முடிக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

1) GSOFT SYSTEM = Rs,98,940/.
2) CURSON SOLUTION = Rs,1,18,728/-

அலுவலக குறிப்பு–

1)மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் வரபெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய என்ற நிறுறுத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.**1.00** லட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2)நகர மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 8**

இந் நகராட்சியின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் அனைத்தையும் கணினியில் பதிவு ஏற்றம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் அறிவுறுத்தி உள்ளதின்படி இந் நகராட்சியின் பிறப்பு இறப்பு பதிவுகளில் **1947** ம் ஆண்டு முதல் பதிவேற்றம் செய்யவும் இதற்காகும் தோராய செலவினம் ரூ.**4.00** இலட்சத்தை பொது நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.
(ந.க.எண்.2279/2017/எச்1)

பொருள் – 9

இந் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பை அள்ள பயன்படும் டாடா ஏஸ் வண்டி எண். டி.என்.19 எல். 6946 ன் 4 டயர்களும் பஞ்சர் ஆகிவிட்டதால் அதற்கான செலவினம் ரூ,.10,000/–த்திற்கு மன்ற தீர்மான எண். 460 நாள் 27.5.2018 ல் அனுமதிப் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்க உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) அம்பிகா டயர்ஸ், செங்கல்பட்டு =ரூ.10,000/–
2) முந்தரா டயர்ஸ், செங்கல்பட்டு =ரூ.10,800/–
3) மாணிக்கம் டயர்ஸ், செங்கல்பட்டு =ரூ.10,400/–

மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் அம்பிகா டயர்ஸ், செங்கல்பட்டு அவர்களின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 10

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகள் அள்ள பயன்படும் ஆட்டோ வண்டி எண். டி.என். 21 எ.டபள்யு. 1525 பழுது பார்க்க தோராய தொகை ரூ.0.43 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற தீர்மான எண். 466 நாள் 27.5.2018ல் அனுமதி அளிக்கப்பட்டு, 20.6.2018ல் அன்று ஒப்பந்ததபள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி | வைப்புத் தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீராமன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், | ரூ.43,000/– | ரூ.500/– | ரூ.436/– |
| 2 | கே.ஆர்.வி. இன்ஜினியரிங் ஒர்க்ஸ், | ரூ.55,000/– | ரூ.500/– | ரூ.436/– |

மேற்படி 2 ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண்.1 ல் கண்டுள்ள ஸ்ரீராம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 11

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் தினசரி குப்பைகள் அள்ள பயன்படும் மினி லாரி வண்டி எண். டி.என். 19ஜெ 1812 பழுது பார்த்து தகுதிசான்று பெற தோராய தொகை ரூ.0.95 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற தீர்மான எண். 46 நாள் 27.5.2018 ல் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 31.5.2018 அன்று ஒப்பந்ததபள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி | வைப்புத் தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | Madras From Equipments | ரூ.110000/– | ரூ.1000/– | ரூ.436/– |
| 2 | Kaveri Implements | ரூ.94970/– | ரூ.1000/– | ரூ.436/– |

மேற்படி 2 ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண்.2 ல் கண்டுள்ள Kaveri Implements என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 12

செங்கல்பட்டு நகராட்சியின் பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனம் வண்டி எண். டி.என். 21 டி 7583 பழுது பார்க்க தோராய தொகை ரூ.0.50 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற தீர்மான எண். 46 நாள் 27.5.2018 ல் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 31.5.2018 அன்று ஒப்பந்ததபள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி | வைப்புத் தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | Madras From Equipments | ரூ.75000/– | ரூ.500/– | ரூ.436/– |
| 2 | Kaveri Implements | ரூ.49950/– | ரூ.5ரூ00/– | ரூ.436/– |

மேற்படி 2 ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண்.2 ல் கண்டுள்ள Kaveri Implements என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 13

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான அனைத்து வாகனங்களுக்கும் சாலைவரி, காப்பீட்டு தொகை எப்.சி மற்றும் இதர கட்டணங்களுக்கான அனைத்து கட்டணங்களும் 2018–19ம் நடப்பு ஆண்டு வரையில் நிலுவை மற்றும் நடப்பில் உள்ள அனைத்து வாகனங்களும் மேற்கண்ட இனங்களுக்கான தொகைகளை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 14

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வரும் டி.பி.சி. பணியாளர்கள் 50 நபர்களுக்கு 20.1.2018 வரை ஊதியம் வழங்க மன்ற தீர்மானம் எண். 259 நாள் 30.11.2017ல் அனுமதிப் பெற்ப்பட்டுள்ள நிலையில் மீண்டும் மன்ற தீர்மானம் எண். 323 நாள் 7.2.2018ல் 6 மாதங்களுக்கு இப் பணியினை நீட்டிப்பு செய்து அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் நகரின் முக்கியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி 6 மாதங்களுக்கு இப் பணியினை நீட்டிப்பு செய்தும் அதற்கான ஊதியம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 15**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து இடங்களுக்கும் பொது சுகாதார பிரிவு மூலம் துப்புரவு பணிக்காக பிளிச்சிங் பவுடர் பயன்படுத்த வேண்டியுள்ளதால் 2018–19ம் ஆண்டிற்கு சுமார் 10 டன் வாங்கி பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 16**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரம் 33 வார்டுகளில் முக்கிய இடங்களான அம்மா உணவகம், புதிய பேருந்து நிலையம், பழைய பேரூந்து நிலையம், மீன்மார்கெட், கோயில்கள் மற்றும் பொது இடங்களில் சுத்தம் செய்து நீர்த்த சுண்ணாம்பு தூள் போடுவதற்கு சுமார் 10 டன் சண்ணாம்பு தூள் 2018–19ம் ஆண்டிற்கு தேவைப்படுவதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கு உத்தேச செலவு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 17**

செங்கல்பட்டு நகராட்சியின் பிறப்பு இறப்பு பதிவுகள் அனைத்தையும் கணினியில் பதிவேற்றம் செய்ய ரூ.4.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 26.6.2018 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி | வைப்புத் தொகை | ஒப்பந்தபுள்ளி படிவம் |
|---|---|---|---|---|
| 1 | Sri Srinivasan Enterprieses | ரூ3.50 இலட்சம் | ரூ.4000/– | ரூ.436/– |
| 2 | You Enterprises | ரூ.3.00 இலட்சம் | ரூ.4000/– | ரூ.436/– |

மேற்படி 2 ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண்.2 ல் கண்டுள்ள You Enterprises என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 18**

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 1.10.2018 முதல் ஏற்கனவே உள்ள தொழில்வரித் தொகையில் இருந்து 35 சதவீதம் உயர்வு செய்ததன் அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான செலவினத் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. நகராட்சியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கவும் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 19**

செங்கல்பட்டு நகராட்சி கணினி பிரிவில் கணினி மற்றும் பிரிண்டர்களுக்கு 2018–19ம் ஆண்டில் பராமரிப்பு செய்வதற்கு உண்டான செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற தீர்மானம் எண். 418 நாள் 27.4.2018ல் அனுமதி பெறப்பட்டதின் பேரில் 15.6.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்ப்பட்டதில் கீழ்கண்டுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் வரப் பெற்றுள்ளன.

1) M/s Sri Data Solutions = 26.87 % அதிகம்
2) M/s Incom Solution = 1.80 % குறைவு

மேற்கண்ட 2 ஒப்பந்தபுள்ளியில் M/s Incom Solution நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மற்ற நிறுவனத்தின் வைப்பு தொகை திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1233/2018/பி1)

**பொருள் – 20**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி இந் நகராட்சி பணியாளர்களின் சேமநல நிதி சந்தா தொகைக்கு வட்டி கணக்கீடு செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை, காஞ்சிபுரம் அவர்களுக்கும், இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கும் கணினி மூலம் முடித்து பிரேரனை அனுப்ப கீழ்கண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்பதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | Indl, details per employee one year | Abstract details one year | print out |
|---|---|---|---|---|
| 1 | Raj Rev Soft System | Rs,40/- | Rs.3500/- | Rs.3/- |
| 2 | Venkat Events | Rs.50/- | Rs.4500/- | Rs.3.60 |
| 3 | NTECH Solutions | Rs.45/- | Rs.4000/- | Rs.3.50 |

அலுவலக குறிப்பு–

1) மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Raj Rev Soft System என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் அதற்கு தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 21**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு சேப்பாட்டியம்மன் திருக்கோயில் தேரோட்டம் 14.7.2018 மற்றும் 15.7.2018 அன்று பாலசுந்தரனார் தெரு, பெரிய நத்தம், மேட்டு தெரு, பெரிய ரத்தினம் செட்டி தெரு, கைலாசநாதர் கோயில் தெரு, ரைட்டர் சபாபதி தெரு, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, ஜி.எஸ்.டி. ரோடு, அண்ணாசாலை, மேட்டு தெரு, காந்தி சாலை, ஓசூரம்மன் கோயில் தெருக்கள் வழியாக தேர் வர உள்ளது. (திருத்தேர் உயரம் 33 அடி அகலம் 13 அடி) செல்லும் இடங்களில் சாலை செப்பணிடவும் மரக்கிளைகளை அகற்றுவதற்கும், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும் தோராய மதிப்பீடு ரூ.4.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.